


புரட்சிப் **பெரியார் முழக்கம்**

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2052 | டிசம்பர் 16, 2021 | புரட்சி 20 | முழக்கம் 42 | விலை: ரூ.3.00

## மோசடி ‘யூடியுபர்’ விடுதலை; விஜயேந்திரர் – தமிழ்த் தாய் வாழ்த்துக்கு எழுந்து நிற்க தேவையில்லை என்கிறார், உயர்நீதிமன்ற நீதிபதி

# காசியில் ஆர்.எஸ்.எஸ். குரலை ஒலிக்கிறார் மோடி

*கடந்த வாரம் நிகழ்ந்த செய்திகள் குறித்து நமது பார்வை.*

### ‘தினமலரின்’ திமிர்

தமிழக உயர் கல்வித் துறை அமைச்சர் பொன்முடி, திருச்சி பாரதிதாசன் பல்கலைப் பட்டமளிப்பு விழாவில் பேசும்போது, ‘பெண்கள் தமிழ்நாட்டில் உயர்கல்வி படித்து பட்டம் பெறுவதற்கு பெரியார் பெண்கள் விடுதலைக்குக் குரல் கொடுத்ததே காரணம்’ என்று பேசி இருந்தார். ‘தினமலர்’ பார்ப்பன ஏடு, “எல்லாத்துக்கும் ஈ.வெ,ரா. தான் காரணமா?” என்று அமைச்சர் மீது ஆவேசமாகப் பாய்ந்து, ஆசிரியருக்குக் கடிதம் ஒன்றை வெளியிட்டுள்ளது.

பெரியாருக்கு முன்பே பாரதி பாடவில்லையா என்று கேட்கிறது. பாரதி பாடியிருக்கலாம், ஆனால், சமூகத்தில் பெண்கள் வளர்ச்சிக்கு அவர் இயக்கம் நடத்தினாரா? ‘பேராசைக் காரனடா பார்ப்பான்’ என்றுகூட பாரதி பாடியிருக்கிறார். அதை ‘தினமலர்’ ஏற்கிறதா? அவ்வையார், காக்கைப் பாடினியார் என்ற புலவர்கள் பெரியாருக்கு முன்பே இருந்துள்ளனர் என்கிறது ‘தினமலர்’. அவர்களின் தொடர்ச்சியாக ஏன் பெண் புலவர்கள் உருவாகாமல் போனார்கள்?

கணவன் இறந்தவுடன், மனைவியை கணவன் இறந்த நெருப்பிலேயே உயிருடன் போட்டுக் கொளுத்த வேண்டும் என்ற கொடூரத்தை அரங்கேற்றியது யார்? கணவன் இறந்த உடன் பெண்ணுக்கு மொட்டை அடித்து விதவையாக்கி அவர்களை மூலையிலே முக்காடு போட்டு உட்கார வைத்தது யார்? சிறு பெண் குழந்தைகளை திருமண வாழ்க்கையில் தள்ளி, பால்ய விவாகத்தை அரங்கேற்றியது யார்? இதற்கு பிரிட்டிஷ் ஆட்சியில் தடைச் சட்டம் வந்தபோது, ‘அய்யோ, அய்யோ’ மதத்தில் கை வைக்கிறார்களே என்று மார்பிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டது யார்? கோயில்களில் பெண்களை ‘பொட்டுக் கட்ட’ வைத்து அவர்களை புரோகிதப் பார்ப்பனர்களின், கோயில் தர்மகர்த்தாக்களின் ‘உடல் பசிக்கு’ தீனியாக்கியது யார்? தடைச் சட்டம் வந்தபோது எதிர்த்துப் பேசிய ‘சத்தியமூர்த்தி’ என்ற ‘மனிதாபிமானமற்ற’ மனிதன் யார்? பெண்களுக்கு எதைக் கொடுத்தாலும் கல்வியைக் கொடுக்காதே என்ற மனுசாஸ்திரத்தை ஆதரித்து ஜோதிர் லதா கிரிஜாவைப் பிடித்து இப்போதும் கட்டுரைகளை வெளியிட்டுக் கொண்டிருப்பது யார்? இதே ‘தினமலர்’ தானே! இப்படி நீண்ட பட்டியலிடலாம்.

இத்தனைக் கொடுமைகளையும் எதிர்த்துப் பெரியார் இயக்கமும் திராவிடர் இயக்கமும் நடத்திய போராட்டத்தின் விளைவுதான் தமிழ்நாட்டுப் பெண்களின் கல்வி வளர்ச்சி. ‘தினமலர்’ திமிர் பிடித்து ‘பூணூலை’ உருவிக் கொண்டு ஆட வேண்டாம். குடும்ப சொத்தில் பெண்களுக்கும் பங்கு உண்டு என்று இந்தியாவிலேயே முதன்முறையாக சட்டம் கொண்டு வந்தது - கலைஞர் ஆட்சி தான். அதற்குப் பிறகு தான் நாடாளுமன்றத்திலேயே சட்டம் வந்தது. ‘தினமலர்’ புரிந்து கொள்ளட்டும்.

### கவர்னரிடம் காவடி தூக்கும் அண்ணாமலை

தமிழக ஆளுநரிடம் பா.ஜ.க. தலைவர் அண்ணாமலையும் அவரது பரிவாரங்களோடு சென்று புகார் மனு தந்திருக்கிறார். ‘மாரிதாஸ்’ போன்ற ‘யூடியுபர்களை’ தமிழ்நாடு அரசு பழி வாங்கி வருவதாக அதில் குற்றம்சாட்டி இருந்தனர். தமிழ்நாட்டில் இராணுவத் தளபதி உள்ளிட்ட 14 பேர் சென்ற ஹெலிகாப்டர் நொறுங்கி உயிரிழந்ததற்குக் காரணம், தமிழ்நாட்டில் தி.மு.க. ஆட்சியில் காஷ்மீர் தீவிரவாதிகள் ஊடுருவியதால் தான் என்று திமிரோடு எழுதியிருந்தார் அந்த ஆசாமி.

‘நியூஸ் 18’ தொலைக்காட்சி முதன்மைச் செய்தியாளராக இருந்த கு. குணசேகரன், செய்தியாளர் ஜீவசகாப்தன் போன்றவர்கள், பெரியார் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் என்பதால் தொலைக்காட்சியை இந்து மதத்துக்கும், மோடி ஆட்சிக்கும் எதிராகப் பயன்படுத்துவதோடு, ‘நியூஸ் 18’ தொலைக்காட்சி, மோடிக்கு எதிராகவும், இந்துமத துவேஷத்துடனும் செயல்படுகிறது என்று தனது சமூக வலைத்தளத்தில் பதிவிட்டார். ‘நியூஸ் 18’ நிர்வாகமே 100 கோடி இழப்பீடு கேட்டு மாரிதாஸ் மீது வழக்கு தொடர்ந்தது. வழக்கு விசாரணை நிலுவையில் இருக்கிறது. ‘நியூஸ் 18’ இணையதள செய்தி ஆசிரியர், தனக்கு ஒரு மின்னஞ்சல் அனுப்பியதாகவும், அதில் உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்ததாகவும் ஒரு கடிதத்தை மாரிதாஸ் தனது முகநூலில் பதிவிட்டிருந்தார். அது மோசடிக் கடிதம். அப்படி ஒரு கடிதத்தை எழுதவே இல்லை என்று ‘நியூஸ் 18’ இணையதள ஆசிரியர் மோசடி வழக்கு தொடர்ந்தார். அந்த வழக்கும் உயர்நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

இந்த நிலையில், பா.ஜ.க.வின் ஊதுகுழலாக செயல்பட்ட அ.இ.அ.தி.மு.க. ஆட்சி, தொடை நடுங்கி வழக்கு விசாரணையைத் துரிதப்படுத்தவில்லை. இப்போது ஆட்சி மாற்றம் வந்த பிறகு, இராணுவத் தளபதி உயிரிழந்தது தொடர்பாக வெளியிட்ட பதிவின் கீழ் தமிழக அரசு காவல்துறை வழக்கு பதிவு செய்து, மாரிதாசை கைது செய்து புழல் சிறையில் அடைத்தது அண்ணாமலையும் அவரது ஆட்களும் ஆளுநரிடம் முறையிட்டதைத் தொடர்ந்து இரண்டே நாளில் மதுரை உயர்நீதி மன்றக் கிளையின் நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதன், அனைத்து வழக்குகளையும் இரத்து செய்து உத்தரவிட்டுள்ளார். மதுரை உயர்நீதிமன்றத்தில் கூடுதல் சொலிசிட்டர் ஜெனரலாக இருந்தபோது பா.ஜ.க. நடத்திய நிகழ்ச்சியில் இந்த நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதன் பங்கேற்றதை உரிய ஆதாரத்துடன் முகநூலில் ‘நெட்டிசன்கள்’ வெளியிட்டுள்ளார்கள்.

இரண்டு நாட்களுக்கு முன்பு தமிழ்த் தாய் வாழ்த்தும், இறை வாழ்த்தும் ஒன்று தான் என்றும், சமஸ்கிருத அகராதி வெளியீட்டு விழாவில் காஞ்சி சங்கராச்சாரி விஜயேந்திரன் எழுந்து நின்று மரியாதை செலுத்த வேண்டியது ஒன்றும் கட்டாயமில்லை என்றும் இதே நீதிபதி தீர்ப்பளித்தார். இதுபோன்ற துறவிகள் உட்கார்ந்த நிலையிலேயே தியானத்தில் கடவுளை பிரார்த்திப்பவர்கள் என்றும் தீர்ப்பில் அவர் கூறியது நினைவுகூரத் தக்கது.

### உ.பி. தேர்தலும் காசி விசுவநாதன் கோயிலும்

உ.பி. சட்டமன்றத் தேர்தல் வரும் நிலையில், தனது வாரணாசி தொகுதிக்கு உட்பட்ட காசி விசுவநாதன் கோயிலுக்கும் கங்கை நதிக்கும் இடையே இணைப்பு ஏற்படுத்தும் வகையில் 339 கோடி செலவில் புதிய திட்டங்களைத் தொடங்கி வைத்துள்ளார் மோடி. வேத புரோகிதர்கள் மணிக் கணக்கில் வேத மந்திரங்கள் ஓத அவர்களுக்கு எதிரே பயபக்தியுடன் அமர்ந்திருக்கும் காட்சிகளை நீண்ட நேரம் தொலைக்காட்சிகள் நேரலையில் ஒளி பரப்பின. கங்கையில் புனித ‘நீராடி’ விட்டு சிவலிங்க அபிஷேகம், ‘தீப ஆராதனை’களை நடத்தி விட்டு கோயில்களைக் கட்டிய தொழிலாளர்கள், பொறியாளர்கள், கைவினைஞர்களுடன் ஒன்றாக அமர்ந்து சாப்பிட்டு அவர்களை கவுரவித்தாராம் மோடி. ஆனால், இந்தத் தொழிலாளர்களுக்கு தொடர்பே இல்லாத சமஸ்கிருத வேத மந்திரங்கள் தான் கோயிலுக்குள் கேட்க முடியும். பார்ப்பன புரோகிதர்களிடமே பிரதமர் மண்டியிட்டு வணங்குவார்.

நிகழ்ச்சியில் பேசிய மோடி, ஒரு ஆர்.எஸ்.எஸ். காரரைப் போல இஸ்லாமிய வெறுப்பைக் கக்கியிருக்கிறார். அவுரங்க சீப், காசி கோயிலை இடித்தார் என்றும், இஸ்லாமியர்கள் இந்து கோயில்களை தகர்த்தனர் என்றும் பேசியிருக்கிறார். மன்னர்கள் ஆட்சிக் காலத்தில் நடந்தது. ஜனநாயக நாட்டில், பாப்ரி மசூதியை இடித்துத் தரைமட்டமாக்கி, இடித்தது யார்? இடித்தவர்களை வழக்கிலிருந்து விடுதலை செய்ய வைத்தது யார்? இவர்களுக்கு ‘தியாகப் பட்டம்’ சூட்டி மகிழும் மோடிக் கூட்டத்துக்கு அவுரங்க சீப்பை குறை கூற என்ன தார்மீக உரிமை இருக்கிறது?

### பெண்களை இழிவுபடுத்தும் சி.பி.எஸ்.இ.

சி.பி.எஸ்.இ. வினாத்தாளில் பெண்களை இழிவுபடுத்தும் வகையில் கேட்கப்பட்ட கேள்விகள்.

அந்த சர்ச்சைக்குரிய கேள்வி ஒரு பெரிய சொற்றொடராக இடம்பெற்றிருந்தது. அந்த வாக்கியத்தில், மனைவிகள் தங்கள் கணவருக்குக் கீழ்ப்படிவதை நிறுத்திவிட்டார்கள், அதுவே குழந்தைகள் மற்றும்

(4ஆம் பக்கம்)

## காசி ஆன்மீக சின்னமா? பார்ப்பனர்களின் கொலைக் களமா?

காசி விசுவநாதர் கோயில் வெறும் கட்டிடம் அல்ல; இந்திய ஆன்மீக ஆன்மாவின் சின்னம் என்று மோடி, பூரித்துப் பேசியிருக்கிறார். அந்த ஆன்மீக ஆன்மா அப்பாவிகளின் கொலைக்களமாக பார்ப்பனர்களால் மாற்றப்பட்டது என்பது தான் உண்மையான வரலாறு. சுவாமி சிவானந்த சரசுவதி எழுதி, வஉ.சி. முன்னுரையுடன் பெரியாரின் சுயமரியாதைப் பிரச்சாரம், 1928 இல் வெளியிட்ட ‘ஞான சூரியன்’ நூல் இந்த உண்மையை அம்பலப்படுத்துகிறது. சுவாமி சிவானந்தர், தமிழ், வடமொழி இரண்டிலும் கற்றுத் தேர்ந்தவர். ஆழ்ந்த இறை பக்தி கொண்ட பார்ப்பன எதிர்ப்பாளர்.

காசிக்குப் போய் இறந்தால் மோட்சம் போகலாம் என்ற செய்தியை பார்ப்பன புரோகிதர்கள் பரப்பி மக்களை நம்ப வைத்தனர். இதனால் காசிக்கு பெரும் பணக்காரர்கள்கூட குடும்பத்துடன் நடந்தே போனார்கள். வழியில் வழிப்பறி – திருடர்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. கோயிலின் ஒரு பகுதியில் பரமசிவன் பார்வதியுடன் காட்சி தந்து பக்தர்களை நேரடியாக மோட்சத்துக்கு அழைத்துச் செல்லும் இடம் என்று ஒரு இடத்தைத் தேர்வு செய்தார்கள். புரோகிதர்கள் அந்த இடத்துக்கு ‘காசிக் கருவெட்டல்’ என்று பெயர் சூட்டினார்கள். அது ஒரு கிணறு. பாதி மூடப்பட்டிருக்கும். பார்ப்பனர்களுக்கு அவர்கள் கேட்கும் தட்சணைகளைத் தந்து அவர்களிடம் கெஞ்சிக் கூத்தாடினால் மட்டுமே மோட்சம் போகும் கிணற்றுக்கு அழைத்துப் போவார்கள். கிணற்றுக்குள்ளே ஒரு சிவலிங்கம் இருக்கும். அதைக் குனிந்து பார்க்கச் சொல்வார்கள். குனிந்து பார்க்கும்போது கிணற்றுக்கு மேல் சங்கிலியால் உருட்டப்பட்ட உருளைக் கட்டி உருட்டி விட்டு கழுத்தை வெட்டச் செய்து கிணற்றுக்குள் தள்ளி விடுவார்கள். முதியவர்களுடன் உடன் வந்த இளம் பெண்களையும் உடைமைகளையும் பார்வைக்குப் படாத தூரத்தில் தலைவாசலிலேயே வெளியிலே நிறுத்தி வைத்து விடுவார்கள். மோட்சத்துக்கு அனுப்பிய பிறகு இளம் பெண்களையும் உடைமைகள் நகைகளையும் புரோகிதர்கள் தங்கள் உரிமைகளாக்கிக் கொள்வார்கள். பிரிட்டிஷ் ஆட்சி, இந்தப் ‘படுகொலை’ மோட்சத்தைத் தடை செய்தது. தடை செய்த பிறகும் வேறு வேறு தந்திரமான குறுக்கு வழிகளில் பார்ப்பனர்கள் பணம், நகை பறிக்கும் தந்திரங்களை செய்து வந்தார்கள் – என்று எழுதியிருக்கிறார் சிவானந்த சரசுவதி.

– புரட்சிப் பெரியார் முழக்கம் 16.12.2021

**தலையங்கம்**

## பாரதிதாசனும், பாரதியும் புதிய கல்விக் கொள்கையை ஏற்றனரா?

பாரதியும் பாரதிதாசனும் ஏற்றுக்கொண்டதே புதிய கல்வி கொள்கை என்று திருச்சியில் பாரதிதாசன் பல்கலை பட்டமளிப்பு விழாவில் தமிழக ஆளுநர் பேசியிருக்கிறார். அதே மேடையில் தமிழக உயர் கல்வித்துறை அமைச்சர் பொன்முடி அதற்கு மறுப்பையும் தெரிவித்திருக்கிறார். தமிழ்நாடு அரசின் கொள்கை இரு மொழிக் கொள்கை. விருப்பமுள்ளவர்கள் வேறு எந்த மொழியையும் தனிப்பட்ட முறையில் கற்றுக் கொள்ள எந்த தடையும் கிடையாது என்று விளக்கம் அளித்திருக்கிறார். தொடர்ந்து தமிழக பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தமிழ்நாடு அரசின் தனியான கல்விக் கொள்கை விரைவில் அறிவிக்கப்படும் அதற்கான நிபுணர் குழு அமைக்கப்பட்டுள்ளது என்றும் அடுத்த நாளே அறிவித்திருக்கிறார்.

பாரதி, பாரதிதாசன் காலங்களில் பட்டப்படிப்பை நான்கு ஆண்டுகளாகவும் 3, 5, 8, 10, 12ஆம் வகுப்புகளுக்குப் பொதுத் தேர்வு நடத்தும் முறை எங்கே இருந்தது? ஆளுநருக்கு உரை எழுதித் தரும் அதிமேதாவிகள் பாரதிதாசன் ஏற்றுக் கொண்டதுதான் புதிய கல்விக் கொள்கை என்று எழுதித் தருகிறார்கள். தமிழ் நாட்டைப் பற்றி ஏதும் அறியாத ஆளுநர் அதை அப்படியே பேசுகிறார். சமஸ்கிருதத்தையும், பார்ப்பனியத்தையும் எதிர்த்து தமிழ் இயக்கம் என்ற நூலில் புரட்சிப் பாக்களை வடித்தவர் புரட்சிக் கவிஞர். ‘எப்பக்கம் வந்து புகுந்துவிடும் இந்தி அது எத்தனை பட்டாளம் கூட்டி வரும்’ என்று எக்காள மிட்டவர் அவர். சமஸ்கிருதம், இந்தியை உயர்த்திப் பிடித்து சமூகநீதியைக் குலைக்கும் புதிய கல்விக் கொள்கைக்கு பாரதிதாசன் முத்திரை குத்தி இங்கே விற்பனை செய்ய முயற்சிப்பது கேலிக்குரியது. தொலைக்காட்சி விவாதத்தில் பேசிய மதிமுக தோழர் காரை செல்வராஜ் ‘இது கோல்வாக்கரின் கல்வித்திட்டம் என்று கூறுங்கள் பாரதி தாசனை இழுக்காதீர்கள்’ என்று பதிலடி கொடுத்தார்.

மாநிலங்களுக்கான கல்விக் கொள்கையை உருவாக்குவது ஒன்றிய அரசின் வேலை அல்ல. அரசியல் நிர்ணய சபையில் அலுவல் மொழியாக இந்தி அங்கீகரிக்கப்பட்டது ஒரே ஒரு ஓட்டு வித்தியாசத்தில் தான் என்பதை மறந்து விட வேண்டாம். அண்ணா முதல்வரானவுடன் தமிழ்நாட்டுப் பள்ளிகளில் இருந்து இந்தியை விரட்டி தமிழ்நாட்டு மொழிக் கொள்கை இருமொழிக் கொள்கை என்று சட்டம் ஆக்கினார். 1976ஆம் ஆண்டு இந்தி தொடர்பான ஒன்றிய அரசின் அறிவுறுத்தல்கள் அனைத்திலும் இது தமிழ்நாட்டுக்குப் பொருந்தாது என்ற நிபந்தனையுடன் தான் இடம் பெற்றிருந்தது.

வலதுசாரி மனுவாதி ஒருவர் தொலைக்காட்சி விவாதத்தில் அரசு பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள் இந்தி படிக்க விரும்பினால் அதற்கு வாய்ப்பை மறுக்கலாமா ? என்று அரசு பள்ளி மாணவர்களுக்காக முதலைக் கண்ணீர் வடித்தார். நீட் தேர்வை திணித்து அரசு பள்ளி மாணவர்களின் மருத்துவ கனவில் மண்ணை அள்ளிப் போட்ட ‘மனுவாதிகள்’ இவர்கள் தான். ஜெர்மனியில், ரஷ்யாவில் தமிழ்நாட்டில் இருந்து வேலைக்குப் போகின்றவர்கள் அந்த மொழியை கட்டாயமாக படித்துத் தான் தீர வேண்டும் அப்படித் தான் படிக்கிறார்கள். விருப்ப மொழி என்று வந்து விட்டால் இந்தியாவில் அங்கீகரிக்கப்பட்ட மொழிகள் மட்டுமல்ல; உலக மொழிகள் அனைத்திலும் எது விருப்பமோ, எது தேவையோ, அதைப் படிப்பது தான். உலக மொழிகள் எல்லாவற்றிலும் தமிழ்நாட்டுப் பள்ளிகளில் கற்றுத் தர வேண்டும் என்று இவர்கள் கூறுகிறார்களா ? இவர்களுக்கு இந்தியை புகுத்தினாலே போதும் இவர்கள் வாயை மூடிக் கொள்வார்கள். சமஸ்கிருதத்தை தெய்வ மொழி ‘இந்து’ கலாச்சார மொழி என்று கூறி, அதற்கு ஏனைய தேசிய மொழிகளைவிட பல மடங்கு கூடுதல் நிதி உதவி ஒதுக்குவது ஒன்றிய பா.ஜ.க. ஆட்சி தானே?

விருப்பத்தின் பெயரால் தான் சமஸ்கிருதம் படிக்கிறார்களா? பார்ப்பனர்களே ‘வேத பாடசாலைக்கு’ முழுக்குப் போட்டு விட்டு ஜெர்மனியும், பிரஞ்சும் தானே படித்துக் கொண்டிருக்கிறார்கள்? அந்த நிலையிலும் பேச ஆளில்லாத மொழிக்கு பல கோடி ரூபாயைக் கொட்டி அழும் ஒன்றிய ஆட்சியின் ஊதுகுழல்கள், அரசுப் பள்ளி மாணவர்களின் விருப்ப மொழி தடுக்கப்படுகிறதே என்று கபட நாடகமாடுகிறார்கள். பள்ளி மாணவர் விருப்பத்தைத் தடுக்கலாமா என்று கேட்கும் ‘மனுவாதி’களுக்கு சில கேள்விகள்.

விரும்புகிற மதத்தை தேர்வு செய்ய ஏன் மறுக்கிறீர்கள்? மாட்டிறைச்சியை விரும்புகிறவர்கள் சாப்பிடுவதற்கு ஏன் கூச்சல் போடுகிறீர்கள் ? விரும்புகிற ஜாதியை தேர்வு செய்ய முடியாமல் பிறப்பின் அடிப்படையில் இந்து மதத்திற்கு ஏன் இரும்பு வேலி போட்டு அடைத்து வைத்திருக்கிறீர்கள்? மொழிவழி மாநிலங்கள் பிரிக்கப்பட்ட பிறகு தமிழ்நாடு விரும்புகிற கல்விக் கொள்கையை உருவாக்கும் போது அதை ஏன் தடுக்கத் துடிக்கிறீர்கள்! அவரவர் விருப்பம், உரிமைகளை காப்பாற்ற வந்தது போல இவர்கள் எழுதும் திரைக்கதை, வசனங்கள் இப்போது காலாவதியாகிவிட்டன. மக்கள் சிந்திக்க தொடங்கி விட்டார்கள் இதை சீண்டுவதற்குக் கூட எவரும் இல்லை என்பதை புரிந்து கொள்ளுங்கள்.

# சட்ட அங்கீகாரம் ஏதுமற்ற அமைப்பு சிபிஐ

நீதித்துறை தொடர்பாக ஒன்றிய அரசு கொண்டு வந்த மசோதா மீது உரையாற்றிய திமுக நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் நீதித்துறையில் ஒரு குறிப்பிட்ட ஜாதியினரின் ஆதிக்கமே மேலோங்கி இருப்பதை சுட்டிக் காட்டி இருக்கிறார். அவர் கூறும் அந்த குறிப்பிட்ட ஜாதி எது என்பது அனைவருக்கும் தெரியும் பழங்குடியின சமூகத்தினர், பட்டியலின பிரிவினர் மற்றும் பெண்களுக்கு உச்சநீதி மன்றத்தில் உரிய பிரதிநிதித்துவம் இல்லை என்பதோடு உச்சநீதிமன்ற வரலாற்றில் பட்டியலின பிரிவைச் சேர்ந்த 5 பேர் மட்டுமே இதுவரை நீதிபதியாக வர முடிந்திருக்கிறது என்பதை பற்றியும் அவர் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

இது ஒரு புறமிருக்க உச்ச நீதிமன்றம் நாட்டின் அரசியல் சட்டம் கூட்டாட்சி மாநில உரிமைகள் தொடர்பான பல முக்கிய வழக்குகளை மாதக்கணக்கில் ஆண்டுக்கணக்கில் கிடப்பில் போட்டு வைத்திருக்கிறது. இதனால் ஏற்கனவே ஒன்றிய ஆட்சி எடுத்த முடிவுகளை அப்படியே பின்பற்றி நிறைவேற்றிக் கொண்டு இருக்கிறது. ‘இந்து’ ஆங்கில நாளேட்டில் கட்டுரை ஒன்று நீதிமன்றத்தின் காலதாமதத்தால் ஏற்பட்ட பாதிப்புகளை பட்டியலிட்டு காட்டியுள்ளது.

2019ஆம் ஆண்டு ஆகஸ்ட் 5ஆம் தேதி குடியரசுத் தலைவர் அவசர சட்டத்தின் வழியாக ஜம்மு மற்றும் காஷ்மீர் மாநிலங்களுக்கான மாநில அந்தஸ்தை யூனியன் பிரதேசங்களாக மாற்றம் செய்து உத்தரவிட்டார். இந்திய வரலாற்றில் இப்படி ஒரு சம்பவம் முன் எப்போதும் நடந்தது இல்லை. இனி இந்த மாநிலங்களுக்கு மீண்டும் மாநில அந்தஸ்து கிடைக்கப் போவது இல்லை பிரச்சனை முடிவுக்கு வந்துவிட்டது என்று பொதுப் புத்தியில் அந்தக் கருத்தை உருவாக்கி வைத்து விட்டது. ஒன்றிய ஆட்சி மாநில உரிமைகளைப் பறித்து யூனியன் பிரதேசமாக மாற்ற அரசியல் சட்டத்தில் இடம் இருக்கிறதா? என்ற கேள்விகளோடு தொடரப்பட்ட வழக்கு அப்படியே விசாரிக்கப்படாமல் இரண்டரை ஆண்டு காலமாக உச்சநீதிமன்றத்தில் கிடப்பில் போடப்பட்டுள்ளது. அதுவும் ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு ஆட்சி இல்லாத போது குடியரசுத் தலைவர் ஆட்சியில் இப்படி ஒரு நிலையை உருவாக்க முடியுமா? என்பது மிக முக்கியமான அரசியல் சட்டம் தொடர்பான ஒரு கேள்வியாகும்.

மற்றொன்று, அரசியல் கட்சிகளுக்கு தேர்தல் பத்திரங்கள் வழியாக நன்கொடை தரலாம் என்று ஒன்றிய அரசின் முடிவுக்கு எதிரான வழக்கு. நன்கொடையை இரகசியமாக வழங்கலாம். எவர் கொடுத்தார் என்பது தேவையில்லை. அதிகாரத்தில் உள்ள ஆளுங்கட்சிக்கு தான் பெரும் தொகை கிடைக்கும். ஏனைய கட்சிகள் இதில் பாகுபடுத்தப்படுகின்றன. அடையாளம் தெரியாத நபர்களிடமிருந்து பெறப்பட்ட பல்லாயிரக் கணக்கான கோடி ரூபாய் கடந்த தேர்தலில் புரண்டது. மக்களிடம் இது குறித்து தெரிவிக்க வேண்டிய அவசியமும் இல்லை. இது தேர்தலில் நம்பகத்தன்மையை குலைக்கிறது. ஒரு குடிமகன் உண்மையை தெரிந்து கொள்ளும் உரிமையை தடுக்கிறது என்ற அடிப்படையில் தேர்தல் பத்திரத்தை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கு அய்ந்து ஆண்டுகளாக விசாரணைக்கு ஏற்கப் படாமல் அப்படியே கிடப்பில் போடப்பட்டிருக்கிறது. இதனால் தேர்தல் பத்திரம் முறைகேடுகள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.

2013ஆம் ஆண்டு கவுகாத்தி உயர்நீதிமன்றம் சிபிஐ என்ற புலனாய்வு அமைப்பு எந்த சட்டத்தின் கீழும் அமைக்கப்படவில்லை சட்ட அங்கீகாரம் இல்லாத அமைப்பு என்று தீர்ப்பளித்தது. அதற்கு அரசு தடை வாங்கியது 8 ஆண்டுகளாக இது குறித்து எந்த விசாரணையும் இல்லை. சட்ட அங்கீகாரம் இல்லாத சிபிஐ என்ற அமைப்பு முழுவீச்சுடன் எப்போதும் இயங்கிக் கொண்டே இருக்கிறது.


குடியுரிமைத் திருத்தச் சட்டம், சட்ட விரோத தடுப்புச் சட்டம் ஆகியவற்றை எதிர்த்து தொடரப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த அரசியல் சட்ட உரிமை சார்ந்த வழக்குகள் அப்படியே கிடப்பில் போடப்பட்டு விட்டன. கூட்டாட்சி தத்துவத்தைக் குலைத்து தன்னிச்சையான சட்ட விரோத முடிவுகளை எடுத்துக் கொண்டிருக்கும் ஒன்றிய ஆட்சி இந்த கால தாமதத்தால் நீண்ட பயன் அடைந்து வருகிறது. அரசியல் சட்டம் உருவான போதே அரசியல் சட்டம் தொடர்பான வழக்குகளை ஒரு மாதத்திற்குள் நீதிமன்றங்கள் விசாரிக்க வேண்டும் என்ற கருத்துக்கள் பலராலும் முன்வைக்கப்பட்டன. ஆனால் சட்டத்தில் அது இடம் பெறவில்லை. இப்போது உச்ச நீதிமன்றத்தின் தாமதம் கூட்டாட்சி அமைப்புகளையும், சட்டம் வழங்கிய உரிமைகளையும் சீர்குலைப் போருக்கு உதவுவதாகவே அமைந்திருக்கிறது. ஒரே ஜாதி அதுவும் அறிவுக்கும் திறமைக்கும் பிறப்புரிமை கோரும் ஜாதி ஆதிக்கம் செலுத்துகிற ஒரு நீதிமன்றத்தில் இப்படித்தான் நீதிகளின் செயல்பாடு நடந்து கொண்டிருக்கிறது.

## ஸ்டெர்லைட் எதிர்ப்புக் கிளர்ச்சி: கழகத் தலைவர் உள்ளிட்ட 5 பேர் மீதான வழக்கு இரத்தானது

கடந்த 2018ஆம் ஆண்டு எடப்பாடி பழனிச்சாமி ஆட்சியில், தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராகப் போராடிய பொதுமக்கள் மீது துப்பாக்கி சூடு நடந்திய காவல்துறையைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்தியதாக, திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி உள்ளிட்ட 5 பேர் மீது பதிவான வழக்கை இரத்து செய்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவு கொடுத்துள்ளது.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி தரப்பில் வழக்கறிஞர் திருமூர்த்தி வாதாடினார்.

## தமிழ்நாட்டில் தமிழ் தெரிந்தவர்களுக்கே வேலை!



தமிழ் எழுதப் படிக்கத் தெரியாத மலையாளிகளையும், கன்னடியர் (மங்களூர்காரர்)களையும் தமிழ் நாட்டிலே மாகாணத் தலைமை உத்தியோகம், ஜில்லாத் தலைமை உத்தியோகம், மற்றும் கெஜட் பதிவு அதிகாரிகள் கமிஷ்னர்கள் முதலிய உத்தியோகங்களில் நியமிப்பது என்பது சர்வசாதாரணமான காரியமாக இருந்து வருகிறது. ஜனநாயக நாடு, சுதந்திர நாடு, மக்களாட்சி நடைபெறுகிற நாடு என்ற அலங்காரப் பெயர்களைச் சொல்லிக் கொண்டு நடைபெறுகிற ஆட்சியில் 100 க்கு 80 பேர்களுக்கு மேற்பட்டுக் கல்வியறிவில்லாத பாமர மக்கள் நிறைந்திருக்கும் நாடு என்பதை உணராமல், மேற்கண்ட மாதிரியான நாட்டு மொழித் தெரியாத அன்னிய மொழியாளர்களை அதிகாரிகளாக நியமிப்பதென்றால் குடிமக்கள் அதிகாரிகளிடம் எப்படி பேச முடியும் ? அதிகாரிகளுக்குக் குடிமக்கள் எந்த மொழியில் விண்ணப்பங்களையும் வேண்டுகோள்களையும் எழுத முடியும் ?

‘விடுதலை’ 22.4.1955

## இளைய தலைமுறை பெரியாரியலை எப்படி புரிந்து கொள்ள வேண்டும்? (2)

# ஜெர்மனியின் நாசிச எதிர்ப்பும் பெரியாரின் பார்ப்பனிய எதிர்ப்பும் ஒன்றே!

**பூபாலன்**

***பா**ர்ப்பனியம் என்ற அரசியல் சமூகக் கோட்பாட்டை தகர்க்க பெருந்திரளான மக்களிடம் படிந்து நிற்கும் உளவியலுக்கு எதிரான கருத்தியலைக் கட்டமைக்க வேண்டும் என்று பெரியார் சரியாக சிந்தித்தார்.*

*புராணப் புரட்டு – பனிப் போரின் பெருமைகளை மக்கள் மொழியில் போட்டுடைத்ததன் விளைவாக பார்ப்பனியம் தனக்காக நிலைநிறுத்திக் கொண்ட உயர்தனிப் பெருமைகள் சிதையத் தொடங்கின.*

மானுடச் சமூகப் பரிணாமத்தில், ‘அடிமைச் சமூகம்’ (Slavery) என்ற பண்புக்கூறு உலகம் முழுவதும் தோன்றிய ஒரு ‘உழைப்புச் சுரண்டல்’ ஏற்பாடு. அது ஒரு விதத்தில் உழைப்பிலிருந்து ஒரு சிறு மக்கள் திரளை விலக்கி அமர வைத்ததிலேயே, மனித சமூகம் கலை இலக்கிய உருவாக்கம் நோக்கி நகரமுடிந்தது. ஆனால், உலக நிலப் பரப்பெங்கும் இந்த அடிமை சமூக முறையில்; உழைப்பைச் சுரண்டி பயன் படுத்தும், அனுபவிக்கும் சமூகப் படிநிலைகளில் மாற்றங்கள், ஏற்றத் தாழ்வுக் கட்டமைப்புத் திருப்பங்கள் என்பவை வரலாறு நெடுகிலும் நிகழ்ந்து கொண்டேயிருக்கின்றன.

இந்த வகையில், ஒரு எளிய புரிதலிலே; இந்திய நிலப்பரப்பின் வர்ணாசிரமம் என்ற அநீதியின் வகைப்பாடு என்பது நிரந்தரமாக உழைக்கும், அடிமைத் தொழிலாளர்களை போதுமான அளவில் எப்பொழுதும் குறைவின்றி அதே நிலையில் வைத்திருக்கும் ஒரு சமூக ஏற்பாடு என்பது புரியும். இந்த ஏற்பாட்டின் பயனாளிகள், சந்தேகமே இல்லாமல் இந்த அடுக்கின் மேல் அமர்ந்திருப்பவர்கள் தான். இந்தச் சுரண்டல் அடுக்கடுக்காக பகிரப்பட்டு உச்சத்தில் முழுமையாக உட்கொள்ளப் படுகிறது. அடிமைச் சமூக வகைப் பாட்டு முறையில் இது ஓர் இயல்நிலைதான். ஆனால் இங்கு எது, இந்திய வர்ணாசிரம சமூக அமைப்பை மிகக் கொடூரமான தாக்குகிறதென்றால்; இந்த சுரண்டலடுக்கின் மேலிருந்து கீழான படிநிலைகள்; சில நூற்றாண்டுகளல்ல, சில ஆயிரமாண்டுகள் எந்தவொரு சிறு அசைவுமின்றி இன்று வரையில் அப்படியே அசைக்கப்படமுடியாமல் தொடர்வது தான்.

இல்லை, இந்த வர்ணாசிரம அடுக்கின் மேலிருப்பவர்கள் மிகுந்த அறிவு கொண்டவர்கள், ஒரு மரபுத்தொடர்ச்சியான கல்வி கொண்டவர்கள் என்றால்; ஏன், எப்படி அந்தக் கல்வியும் அறிவும் அவர்களுக்கு மட்டுமானதாக ஆயிரமாண்டுகளாக உள்ளது, என்பதை சிந்திக்கும் எவரும் கேள்வி கேட்க வேண்டும். இல்லை அவர்கள் அதற்கான சூழலை உருவாக்கித் தக்க வைத்துக்கொள்கிறார்கள் என்றால்; அது எவ்வாறு அவர்களால் மட்டும் சாத்தியமாகிறது? என்பது கேட்கப்படவேண்டும். இல்லை; ஏன், அவர்கள் அந்த தங்களுக்கான உடைமையாக்கிக் கொண்ட அறிவை சமூகம் முழுமைக்கும் பகிர மறுக்கிறார்கள் எனபது உரையாடப்படவேண்டும்.

இங்கு பார்ப்பனியம் என்பது; தமிழக அரசியல் சிந்தனைத் தளத்தில் வெற்று பிராமண எதிர்ப்பு என்பதாக தட்டையாக புரிந்து கொள்ளப்படுகிறது. இல்லை; அது ஜெர்மனியின் நாசிசம், இத்தாலியின் பாசிசம் போன்று இந்திய நிலப்பரப்பு தன் மானுடபடிமலர்ச்சியில் கண்டறிந்த ஒரு அரசியல் சித்தாந்தம் (Political ideology). ஆம், பார்ப்பனியம் ஒரு மனவியல் கட்டமைப்பு (Psychological Phenomenon), இதன் மனவியல் கூறுகள் பார்ப்பனர், பார்ப்பனரல்லாதோர் என நம் அனைவருக்குள்ளும், இந்திய நிலப்பரப்பின் எல்லா மனங்களுக்குள்ளும் பரவி இருப்பதையும்; அது காலங்காலமாக தன்னைத்தானே படி எடுத்துக் கொள்வதையும் மிகத் தீவிரமாக ஆய்ந்து எழுதியிருக்கிறார் அம்பேத்கர்.

ஆம், பார்ப்பனியம் ஒரு அரசியல் கோட்பாடு; அது வெறுமனே பிராமணர்களையோ அல்லது வேறெந்தவொரு குறிப்பிட்ட சாதியையோ சார்ந்ததன்று. அது இந்திய முழுமைக்குமான ஒரு சமூக மனநிலை அமைப்பொழுங்காகி கெட்டிப்பட்டுள்ளது, அதை இந்திய நிலப்பரப்பிற்குள் எந்தவொரு தனிமனித நினைப்பாலும் விட்டுவிலகமுடியா தன்மையுடைத்ததாகிவிட்டது. இந்தச் சுரண்டல் அரசியல் கோட்பாட்டமைப்பை கேள்விக்குள்ளாக்க, விவாதிக்க ஒரு பெருந்திரள் சமூக கட்டமைப்பு மனநிலையை உருவாக்க வேண்டும். இந்தப் பெருந்திரளை சிந்தனைத்தளத்தில் துளியேனும் சாத்தியப்படுத்தியதே பெரியாரின் வரலாற்றுப் பாத்திரம். இது அவ்வளவு எளிதான போராட்டமல்ல என்று கூறும் பெரியார், ஆனாலும் இதைச் சாதித்தே ஆக வேண்டும் என்கிறார்.

> *“நாம் நம்முடைய உரிமைகளைப் பெறுவது என்றாலே என்ன அர்த்தம் என்றால், நம்முடைய உரிமைகளைப் பறித்து அனுபவித்து வருகிற எதிரிகளின் ஆதிக்கம் அழிவு என்றுதான் அர்த்தம் ஆகும். அவர்களுடைய அழிவின் மீதுதான் நாம் நம்முடைய உரிமைகளைப் பெறமுடியும், அந்த அளவுக்கு அவர்கள் நம் மீது நம் உரிமைகளைப் பெறுவதற்கில்லாமல் ஆதிக்கம் பெற்று இருக்கிறார்கள்.*
>
> *ஆனால், இந்தக் காரியம் சுலபமானதல்ல; சாதாரணமாகச் சாதித்து விடலாம் என்கிறதான தன்மையில் இல்லை. இது மிகப் பெரிய காரியம் என்பதோடல்லாமல் மிக மிகப் பயங்கரமான பலர் பலியாக வேண்டிய காரியமாகும், நம்முடைய எதிரிகளுக்கு இருக்கிற வசதிகளும், பக்கபலமும் மிக மிக ஏராளமானவை. மதமும் கடவுளும், சாஸ்திரங்களும், ஆட்சியும், அதனைச் சார்ந்தவைகளும் அவர்கள் பக்கம் இருக்கின்றன என்பதுடன், நம்முடைய எதிரிகளைப் பாதுகாப்பதற்காகவே, நம்முடைய எதிரிகளின் ஆதிக்கத்தை நிலை நிறுத்துவதற்காகவென்றேதான் அவைகளோடுகூட சர்க்காரும் இருந்து வருகிறது.*
>
> *எதிர்த்துப் போராடுகிற நம் எதிரிகளுக்கு ஒற்றுமை அதிகம். நமக்கு எவ்வித பலமும் கிடையாது. நமக்குள் ஒற்றுமையும் கிடையாது துரோகிகளுக்கு அதிகம். ஆனாலும் நாம், பலமிக்க வலுவுற்றிருக்கும் நம்முடைய எதிரிகளை எதிர்த்துப் போராடியாக வேண்டும். இதற்கு மனத்துணிவு வேண்டும்.*
>
> *விடுதலை 30.05.1951*

வர்ணாசிரமம், கேள்விக்குள்ளாக்கப்படுவதில் அதிகம் அஞ்சுபவர்களாக பிராமணர்கள் இருக்கிறார்கள். ஏனெனில் இந்த சமூகப்படிநிலையின் உச்சப்பங்கு இந்திய வர்ணப் பிரமிடின் உச்சத்தில் அமர்ந்து இருக்கும் அவர்களுக்கே சென்று சேருகிறது. அதற்காக இயல்பிலேயே இந்தக் கோட்பாட்டமைப்பை பாதுகாத்து நீட்டித்து தக்கவைக்க, அதிகம் மெனெக்கெட வேண்டிய தேவை அவர்களுக்குள்ளது. அதற்காக அரசியல், சமூகம், ஆன்ம நம்பிக்கைகள், தொழில் துறை பொருளுற்பத்தி என அனைத்து தளத்திலும் கடுமையாக செயல்பட்டு ‘பார்ப்பனியம்’ என்ற அரசியல் கோட்பாட்டை காலந்தோறும் மீட்டுக் கொண்டிருக்கிறார்கள். இது அப்படியே தன்னியல்பில் வர்ண பாகுபாட்டின் அடுத்தடுத்த படிநிலைகளைகளால் கடத்தப்பட்டு சமூகம் முழுமைக்குமாக தக்க வைக்கப்படுகிறது. “இந்தியாவில் சாதிகள்” என்ற கட்டுரையில், இதை சாதிகளின் போலச்செய்தல் பண்பு (Imitating phenomenon) என்பதாக அம்பேத்கர் விரிவாக ஆராய்கிறார்.

இந்த நூற்றாண்டின் தவிர்க்க முடியா சிந்தனையாளர் காந்தி; ஆனால், வர்ணசிரமம் என்ற ‘சுரண்டல் அமைப்பை’, ஒரு கோட்பாடாக ஏற்றுக் கொண்டு அந்தக் கோட்பாட்டுக்குள்ளே நின்று கொண்டு, ‘தீண்டாமை ஒழிப்பை’ வெகுமக்கள் தளத்திற்கு நகர்த்த முயற்சித்தார். இது வர்ணக் கட்டமைப்பை சரித்து விடும் என்பதை உணர்ந்த ஒரு பார்ப்பனிய மனம் காந்தியை பௌதீகமாக அகற்றியது. இந்தப் பார்ப்பனிய கோட்பாட்டமைப்பு எவ்வளவு கொடுமையானதென்றால், அதை மறுத்து வெளியேறும் எந்த தனிமனத்திற்கும் தனித்து இயங்கும் சமூக பாதுகாப்பற்ற நிலையை ஒரு சமூக உளவியலாக ஆக்கிவைத்துள்ளது. இந்த அச்சத்தின் உச்ச விளைவுகளே இன்றும் நிகழும் ஆணவக் கொலைகள். ஆம், இந்திய நிலப்பரப்பில் பார்ப்பனியம் இன்று மிக மிக இறுக்கமான சமூக அரசியல் நிறுவனம் (Socio-political entity). அது தனக்குள் எந்த ஜனநாயக விழுமியத்தையும் (Democratic Belief) அனுமதிப்பதில்லை. இந்த ஜனநாயக மறுப்பே அதை ஒரு அழிவுக் கோட்பாடாக்குகிறது. விரும்புகிற உணர்வு, விரும்புகிற ஊர், விரும்புகிற சாதிய உடைப்புகளை மறுக்கும் ஜனநாயக மறுப்பை அது உள்ளாக்கியிருக்கிறது.

பார்ப்பனியக் கோட்பாட்டில் அடங்கியுள்ள உள்ளார்ந்த பண்பு, அது ஒருதனிமனிதன் சுயத்தை - சுயமரியாதை அடையாளத்தை இழக்கச் செய்வது மட்டுமல்ல, இந்த அடையாள அழிப்பை அவரை விளிம்பு நிலைக்கு ஒதுக்குவதை தன்னிலையாக ஏற்கச் செய்கிறது. இந்த ஆபத்தான உள்ளடக்கத்தைக் கண்டறிந்த தலைவராக பெரியார் உயர்ந்து நிற்கிறார்.

இந்திய சாதியமைப்பில் வர்ண அடிப்படை, பார்ப்பனர் மேலிருந்து சத்திரியர், வைசியர், சூத்திரர், சண்டாளர் என கீழ்நோக்கி விரியும் சமூகப் பிரமீடாக வேத காலம் முதல் இயங்கி வருகிறது. அடிமைச் சமூக வர்ணாசிரம முறைமையையும், அதன் இயங்கு நிலையையும் அம்பேத்கரும் பெரியாரும் மட்டுமே புரிந்து, அதன் வேர் பார்ப்பனர்களிடமிருக்கும் மதக் கண்ணோட்டம் தான். கீழிருந்து அடுக்கடுக்காக பிற வர்ணங்களை மேல்நோக்கி விரித்து சமூக விளிம்பிற்கு தள்ளும் தலைகீழ் பிரமீடாக விளக்கினார்கள். அதனாலேயே; இருவரும் தொடர்ந்து பார்ப்பனியத்தின் மூலவேரான பிராமணர்களை நோக்கி பேசினார்கள், செயல்பட்டார்கள். இதுவே பெரியாரை வெறும் பார்ப்பன வெறுப்பாளர் என்ற தட்டைப்புரிதலுக்கு வழிவகுக்கிறது.

“முட்டாளே, நீ சூத்திரனாம் பாப்பானுக்கு பணிவிடை செய்யனுமாம் உனக்கு அறிவில்லையா, சிந்திச்சு பார்க்க மாட்டியா” என ஒரு பொது மாந்தனை நோக்கி உணர்நிலையில், அவன் சுயம் சார்ந்த கேள்விச் சொற்களில் தாழ்சுயத்தை (Inferior Self) உடைக்க முற்படுகையில்; பார்ப்பனர்களை வந்தேறிகள், நீங்கள் நிலமற்றவர்கள், புராணப் பொய்யையும் புரட்டையும் சொல்லி சுரண்டித் தின்பவர்கள் என்ற சொற்களில் பிராமண மனங்களின் மீயுணர் சுயத்தை (Imperious Self) சிதைக்க முற்படுகிறார் பெரியார். ஏனெனில் இந்த முன் சொன்ன சூத்திர தாழ்சுயமனமும், பின் சொன்ன பிராமண மீயுணர்மனமுமே சனாதன வர்ணாசிரம் என்ற கோட்பாட்டின் தாங்குநிலைப் புள்ளிகள். இந்த தாங்குநிலைப் புள்ளிகள் அசைக்கப்படுகையில் வர்ணாசிரமம் சிதைவுறத் துவங்கும். நவீன இந்திய மனம் தேடும் அனைவருக்குமான அதிகாரப் பரவலாக்க சமூக ஜனநாயகம் (Social Democracy) இந்திய நிலப்பரப்பில் செயல்படத்துவங்கும் என்பதே பெரியாரின் சரியான புரிதலாக இருந்தது.

*(தொடரும்)*

## மதுரையில் சிறப்புடன் நடந்த சட்ட எரிப்பு நாள் கருத்தரங்கம்

*மதுரை மாவட்ட திவிக சார்பில் ஜாதியை பாதுகாக்கும் சட்ட எரிப்பு நாள் கருத்தரங்கம் 29.11.2021 அன்று மாலை 5 மணியளவில் காஸ்மோபாலிட்டன் உணவகத்தில் மடத்துக்குளம் மோகன் நினைவு அரங்கில் நடைபெற்றது. வில்லாபுரம் பகுதி செயலாளர் செந்தில்நாதன் வரவேற்புரை யாற்றினார். மாவட்ட கழகக் காப்பாளர் தளபதி, மாவட்ட தலைவர் காமாட்சி பாண்டி, மாநகர் தலைவர் திலீபன் செந்தில் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட செயலாளர் மா.பா. மணி அமுதன் தலைமை தாங்கினார்.*

*‘பிற்படுத்தப்பட்டோர் உரிமையும் திராவிடர் இயக்கமும்’ என்ற தலைப்பில் அண்ணா திராவிட மக்கள் முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் பசும்பொன். பாண்டியன் உரையாற்றினார்.*

*‘தமிழ் தேசிய இலக்கும் தடுமாற்றங்களும்’ என்ற தலைப்பில் தமிழ்மண் தன்னுரிமை இயக்கத்தின் நெறியாளர் பேராசிரியர் ஜெயராமன் ஆகியோர் உரையாற்றினர்.*

*நிறைவாக ஜாதியை பாதுகாக்கும் அரசியல் சட்டப் பிரிவு எரிப்பு போராட்டங்களையும் பெரியார் தொண்டர்களின் தியாகத்தையும் விளக்கி கழக தலைவர் கொளத்தூர் மணி விரிவாக கருத்துரையாற்றினார்.*

*புலிப்பட்டி பொறுப்பாளர் கருப்பையா நன்றி கூறினார்.*

*பல்வேறு தோழமை அமைப்பு தோழர்களும், புதிய இளைஞர்களும், வழக்கறிஞர்கள் சங்கங்களைச் சார்ந்த தோழர்களும் தன்னார்வத்தோடு இந்த கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.*

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# கழக ஏட்டுக்கு சந்தா: கழகக் கிளைகள் தீவிரப் பணி

**கொளத்தூர் :** 04.12.2021 சனி மாலை 5.30 மணியளவில், கொளத்தூர் ஒன்றிய திராவிடர் விடுதலைக் கழகக் கலந்துரையாடல் கூட்டம் மேற்கு மாவட்டத் தலைவர் சூரியகுமார் தலைமையிலும், மாவட்ட செயலாளர் சி.கோவிந்தராஜ் முன்னிலையிலும் நடைபெற்றது. கூட்டத்தில் புதிய பொறுப்பாளர்களாகக் கீழ்க்கண்ட தோழர்கள் நியமிக்கப்பட்டனர்.

கொளத்தூர் நகரம்: நகரத் தலைவர் -இராமமூர்த்தி, நகரச் செயலாளர் - பா.அறிவுச்செல்வன், பொருளாளர் - சூ. இனியன், காவலாண்டியூர் கிளைக் கழகத் தலைவர் - இராசேந்திரன், துணைத் தலைவர் - சேகர், செயலாளர் - தங்கராசு, இணைச் செயலாளர் - சந்தோஷ், பொருளாளர் - சின்ராசு, உக்கம்பருத்திக்காடு செயலாளர் - செல்வம், ஒருங்கிணைப்பாளர்கள் - கோமதி, சித்ரா, ஒன்றிய குழு ஒருங்கிணைப்பாளர்கள் - சித்துசாமி, விஜயகுமார், ஒருங்கிணைப்பு குழு தோழர்கள் - சுதா, இளவரசன், சுரேஷ், சக்தி குமார், இளைஞர் குழு ஒருங்கிணைப்பாளர் - செல்வேந்திரன், இளைஞர் குழு தோழர்கள் - சூ. இனியன், பா.அறிவுச்செல்வன், சந்தோஷ், இராமன், இலட்சுமணன்.

தீர்மானங்கள் : 1) 09.11.2021 அன்று இயற்கை எய்திய திராவிடர் கழக மண்டல பொறுப்பாளர் பிரகலாதன் மறைவிற்கு கொளத்தூர் நகர திராவிடர் விடுதலைக் கழகம் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

2) 2022 ஆம் ஆண்டு ‘புரட்சிப் பெரியார் முழக்க’ சந்தாவினை சேலம் மாவட்ட கலந்துரையாடல் கூட்டத்தில் எடுத்த முடிவின்படி சந்தா சேர்ப்பது என தீர்மானிக்கப்பட்டது.

3) 2022ஆம் ஆண்டு முதல் கிளைக் கழகங்களில் தெருமுனை கூட்டங்களை நடத்தி புதிய தோழர்களை சேர்ப்பதென தீர்மானிக்கப்பட்டது.

நிறைவாக புதிதாக பொறுப்பேற்ற நகர செயலாளர் பா.அறிவுச்செல்வன் நன்றியுரை கூற கலந்துரையாடல் கூட்டம் நிறைவடைந்தது.

**மதுரை :** மதுரை மாவட்டக் கழக புதிய பொறுப்பாளர்கள் நியமனம் - புறநகர் மாவட்ட தலைவர் - மாளவிகா; புறநகர் மாவட்ட செயலாளர்- பிரபாகர், புலிப்பட்டி பகுதி செயலாளர் - கருப்பையா, வில்லாபுரம் பகுதி செயலாளர் மற்றும் மாவட்ட இணையதள பொறுப்பாளர் - செந்தில் நாதன், மாவட்ட செயலாளர் மா.பா.மணிஅமுதன் பரிந்துரையின்படி, மாவட்ட கழக காப்பாளர் தளபதி, மாவட்ட தலைவர் காமாட்சி பாண்டி உள்ளிட்ட தோழர்களின் ஆலோசனையின் பெயரில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி முன்னிலையில் மேற்கண்ட புதிய பொறுப்பாளர்கள் 21.08.2021 அன்று நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

**இளம்பிள்ளை:** சேலம் கிழக்கு மாவட்டம் இளம்பிள்ளையில் 05.12. 21 ஞாயிற்றுக்கிழமை காலை 11-00 மணியளவில் முத்து மாணிக்கம் கடையில் கலந்துரையாடல் கூட்டம் மாவட்ட தலைவர் கா. சக்திவேல் தலைமையில் மாவட்ட செயலாளர் டேவிட் முன்னிலையில் நடைபெற்றது இந்தக் கூட்டத்தில் இளம்பிள்ளை பகுதி சார்பாக 150 பெரியார் முழக்கம் சந்தாக்களை டிசம்பர் இறுதிக்குள் முடித்துக் கொடுப்பதாகவும் பிரச்சார தெருமுனை கூட்டங்கள் நடத்துவதாகவும் தீர்மானிக்கப்பட்டது இறுதியாக இளம்பிள்ளை பகுதிப் செயலாளர் தங்கதுரை நன்றி உரை கூற கூட்டம் முடிந்தது.

**சேலம் மாநகர் :** 06.12. 2021 அன்று மாலை 6 - மணி அளவில் சேலம் மாநகர கலந்துரையாடல் கூட்டம் மாவட்ட செயலாளர் டேவிட் தலைமையில் பிரபு இல்லத்தில் நடைபெற்றது கூட்டத்தில் இயக்க வளர்ச்சி குறித்து விவாதிக்கப் பட்டது பெரியார் முழக்கம் சந்தா நகர சார்பாக 200 சந்தாக்கள் முடித்துக் கொடுப்பதாக தீர்மானிக்கப்பட்டது தெருமுனைக் கூட்டங்கள் நடத்துவதாக தீர்மானிக்கப்பட்டு பிரபு நன்றி உரை கூற கூட்டம் முடிந்தது.

**சென்னை – திருவல்லிக்கேணி :** திருவல்லிக்கேணி பகுதி கலந்துரையாடல், டிசம்பர் 5 அன்று மாலை 6 மணியளவில், வி.எம் தெரு பெரியார் படிப்பகத்தில் திருவல்லிக்கேணி பகுதி பொறுப்பாளர் அருண் தலைமையில் நடைபெற்றது.

கலந்துரையாடலில், பொங்கல் நிகழ்வு சிறப்பாக நடத்துவது குறித்தும், கழகத்தின் வார ஏடான ‘புரட்சிப் பெரியார் முழக்க’த்திற்கான அதிகப்படியான சந்தா சேர்ப்பது, பகுதி கழகத்தின் அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

**நங்கவள்ளி :** நங்கவள்ளி பகுதி கலந்துரையாடல் கூட்டம் கழகத் தோழர் செந்தில் இல்லத்தில் 13.12.2021 மாலை 5 மணி அளவில் நடைபெற்றது. மாவட்டத் தலைவர் சூர்யகுமார் தலைமை வகித்தார். மாவட்ட செயலாளர் சி.கோவிந்தராஜ் முன்னிலை வகித்தார்.

கலந்துரையாடலில் -1) புதிய பொறுப்பாளர்கள் நியமனம்; 2) 2022ஆம் ஆண்டு ‘புரட்சி பெரியார் முழக்கம்’ சந்தா சேர்ப்பு ஆகியவை குறித்து விவாதிக்கப்பட்டது.

தீர்மானங்கள் : 1) கூட்டத்தில் 2022ஆம் ஆண்டுக்கான ‘புரட்சி பெரியார் முழக்கம்’ டிசம்பர் 26ஆம் தேதிக்குள் சந்தா சேர்ப்பு கொடுக்கப்படும். 2) தந்தை பெரியார் நினைவு நாள் கூட்டம் டிசம்பர் 26ஆம் தேதி நங்கவள்ளியில் நடத்துவது எனவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

நிகழ்வில் நங்கவள்ளி - ஒன்றிய பொறுப்பாளர்கள்- கிருஷ்ணன், ராஜேந்திரன், நகர தலைவர் - கண்ணன், நகர செயலாளர் - பிரபாகரன் ஆகி யோருக்கு பொறுப்புகள் வழங்கப் பட்டன. நகர செயலாளர் பிரபாகரன் நன்றி கூறினார்.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

வேலைக்காரர்கள் ஒழுக்க மின்மைக்கு முக்கியக் காரணம், மனைவியின் விடுதலை குழந்தைகளின் மீதான பெற்றோரின் அதிகாரத்தை அழித்துவிட்டது. பெண் விடுதலை குழந்தைகளிடையே ஒழுக்கமின்மைக்கு வழி வகுத்தது, சமூக பிரச்சினைகளுக்கு பெண்களின் விடுதலை தான் காரணம், மேலும், இதுபோன்ற சர்ச்சைக்குரிய வாக்கியங்கள் இடம்பெற்றிருந்தன. சோனியா உள்ளிட்ட தலைவர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இந்நிலையில், சி.பி.எஸ்.இ.10ஆம் வகுப்பு ஆங்கில பாடத் தேர்வில் பெண்களை இழிவுபடுத்தும் வகையில் கேட்கப்பட்ட கேள்வி நீக்கப்பட்டது. சர்ச்சைக்குரிய கேள்வி இடம்பெற்றது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சி.பி.எஸ்.இ. அறிவித்துள்ளது. ஆங்கில பாடத் திட்டம் தொடர்பான நிபுணர்களின் பரிந்துரையை ஏற்று கேள்வி நீக்கப்படுவதாகவும், சர்ச்சைக்குரிய கேள்விக்கான முழு மதிப்பெண் அனைத்து மாணவர்களுக்கும் வழங்கப்படும் என்றும் சி.பி.எஸ்.இ. தெரிவித்திருக்கிறது.

– **தொகுப்பு ‘இரா’**

# சென்னை மாவட்டக் கலந்துரையாடல் கூட்டம்

சென்னை மாவட்டத்தின் கலந்துரையாடல் கூட்டம், 11.12.2021 அன்று மாலை 6 மணியளவில், திவிக தலைமையகத்தில், மாவட்ட செயலாளர் உமாபதி தலைமையில் நடைபெற்றது.

கலந்துரையாடலில் ‘புரட்சிப் பெரியார் முழக்க’த்திற்கு கூடுதல் சந்தா சேர்ப்பது, கழகத்தின் அடுத்தக் கட்ட பணிகள், வரும் டிசம். 24இல் தந்தை பெரியார் நினைவு நாளில் ‘புரட்சிப் பெரியார் முழக்க’த்தின் தலையங்கத் தொகுப்பு வெளியீட்டு நிகழ்வை நடத்துவது போன்றவை குறித்து விரிவாகப் பேசப்பட்டது.

கழகத் தோழர்கள் ஒவ்வொருவரும் தங்களது கருத்துக்களை தெரிவித்தனர். நிகழ்வில், தலைமைக்குழு உறுப்பினர் அய்யனார், அன்பு தனசேகர் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துக்களை தெரிவித்தனர். இறுதியாக கழகத்தின் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், தோழர்களின் சில கேள்விகளுக்கு பதில் கூறியும், கழகத்தின் செயல்பாடுகள், திராவிடர் இயக்கத்தின் தேவை குறித்தும் விரிவாக உரையாற்றினார்.

# ஜே.என்.யூ. பல்கலையில் விளிம்பு நிலை மாணவர்கள் முனைவர் பாடத் தேர்வுக்கு தேர்வு பெறவிடாமல் தடுக்கும் சதி

டெல்லி ஜவகர்லால் நேரு பல்கலையில் பிஎச்.டி. கல்விப் படிப்பில், எழுத்துத் தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவர்கள் பலர், நேர்முகத் தேர்வில் மிகக் குறைவான மதிப்பெண்களைப் பெற்றுள்ளனர்.

இந்தியாவின் மிகவும் புகழ்பெற்ற ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத்தில், பிஎச்.டி நேர்முகத் தேர்வில் ஒரு தலைபட்சமாக மதிப்பெண் வழங்கப்பட்டுள்ளதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

பி.எச்.டி போன்ற ஆய்வு படிப்புகளில் சாதி மற்றும் மத அடிப்படையில் பாகுபாடு காட்டப்படுவதாக ஜே.என்.யு. பிர்சா அம்பேத்கர் புலே மாணவர் அமைப்பு (Birsa Ambedkar Phule Students Association - BAPSA) குற்றஞ்சாட்டியுள்ளது. இதுதொடர்பாக, இந்த அமைப்பு ஜேஎன்யு துணைவேந்தர்,ஜேஎன்யு ஆசிரியர் சங்கம் (ஜேஎன்யுடிஏ) கடிதம் எழுதியுள்ளது.

அக்கடிதத்தில், பிஎச்.டி மாணவர் சேர்க்கை எழுத்துத் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வின் (viva voce) அடிப்படையில் நடத்தப்பட்டு வருகிறது. எழுத்துத் தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவர்கள் பலர், நேர்முகத் தேர்வில் மிகக் குறைவான மதிப்பெண்களைப் பெற்றுள்ளனர்.மொத்த மதிப்பெண்ணில் சிலர் ஒரே ஒரு மதிப்பெண் மட்டும் பெற்றுள்ளனர். பட்டியலின/பழங்குடியின/ இதர பிற்படுத்தப்பட்ட/சிறுபான்மையினர் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட மதிப்பெண்களில் இத்தகைய போக்கு காணப்படுவது ஆழந்த அதிர்ச்சியை அளிக்கிறது.

மாணவர்களின் அடிப்படைக் கண்ணியத்தை குறைக்கும் இத்தகைய போக்கை என்றுமே நியாயப்படுத்த இயலாது. மாணவர் சேர்கையில், அப்துல் நபி (Abdul Nafey committee), ராஜீவ் பாட் (Rajiv Bhatt committee) எஸ்.கே தோரட் போன்ற குழுக்களின் பரிந்துரையை உடனடியாக அமல்படுத்த வேண்டும்.

நேர்முகத் தேர்வு மதிப்பெண் முறையில் அதிக வெளிப்படை தன்மை கொண்டு வரப்பட வேண்டும், நேர்முகத் தேர்வுக்கான அதிகபட்ச மதிப்பெண்ணை 30-லிருந்து 15-ஆக குறைக்க வேண்டும். சமூகத்தில் பின்தங்கிய பிரிவினருக்கு இழைக்கப்படும் அநீதிகளை கலைந்தெடுக்க கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் போன்ற பரிந்துரைகளை மேற்கூறிய குழுக்கள் அளித்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ : ஓர் அறிவிப்பு

கொரோனா பெருந்தொற்றுக் காரணமாக, கடந்த ஆண்டு 6 மாதம் ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ இதழ் அனுப்பப்படாமல் இருந்தது. அதற்குப் பிறகு இதழ் அனுப்ப தொடங்கியவுடன், 2020ஆம் ஆண்டு கொடுத்த சந்தாக்களுக்கும் 2021 வரை இதழ் அனுப்பப்பட்டு வந்தது. அதேபோன்று 2021 வரை இதழ் கட்டணம் ஏதும் பெறாமலேயே அனுப்பப்பட்டது என்பதை நினைவுபடுத்துகிறோம். இந்த நிலையில் நிதிச் சுமையை கருத்தில் கொண்டு, வரும் 2022 ஆண்டிற்கான சந்தாவை பழைய சந்தாதாரர்கள் புதுப்பித்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம். புதிய சந்தாதாரர்களுக்கு மட்டுமே ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ இதழ் அனுப்பப்படும். – **நிர்வாகி**

**தொடர்புக்கு : 7373684049**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 16th December 2021

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN